Australian Human Rights Commission

# புகார் ஒன்றை அளித்தல்

அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையம் என்பது ஒரு சுதந்திரமான அமைப்பாகும். இது சட்டவிரோதமான பாலியல், இனம், உடல் இயலாமை மற்றும் வயதுப் பாகுபாடு காட்டல், ILO III பாகுபாடு காட்டல் மற்றும் மனித உரிமைகள் மீறல் ஆகியவை குறித்த புகார்களை விசாரணை செய்து தீர்வு வழங்குகிறது.

## நீங்கள் எவை குறித்து எங்களிடம் புகார் செய்யலாம்

- பாலியல், பாலின அடையாளம், இருபால் உடல் நிலைமை, கர்ப்பம், திருமணம் அல்லது உறவுமுறை நிலைமை, தாய்ப்பால் ஊட்டுதல், குடும்பப் பொறுப்புகள் மற்றும் பாலியல் நாட்டம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாலியல் தொந்தரவும் பாகுபாடு காட்டலும் *பாலியல் பாகுபாடு காட்டலில* உள்ளடங்குகின்றன.
- உடல், அறிவு, உணர்திறன், கற்றல் மற்றும் மனநிலைக் குறைபாடுகள்; நோய் அல்லது சுகவீனம், மருத்துவ நிலைமைகள்; பணி தொடர்பான காயங்கள்; கடந்தகால, நிகழ்கால மற்றும் எதிர்காலத் தகுதிக் குறைபாடுகள்; மற்றும் உடல் குறைபாடுள்ள ஒரு நபருடன் தொடர்புபடுத்துதல் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாடு காட்டல் *இயலாமை பாகுபாடு காட்டலில்* உள்ளடங்குகின்றன.
- இனம், நிறம், மரபுவழி, தேசம், அல்லது இனத் தோற்றம் மற்றும் குடிவரவு நிலைமை ஆகியவற்றின் அடிப்படையிலான இனம் சார்ந்த வெறுப்புணர்வும் பாகுபாடும் *இனப் பாகுபாடு காட்டலில்* உள்ளடங்குகின்றன.
- மிகவும் இளையவராகவோ அல்லது மிகவும் முதியவராகவோ இருப்பதை அடிப்படையாகக் கொண்ட பாகுபாட்டை *வயது பாகுபாடு காட்டல்* உள்ளடக்குகிறது.
- மதம், குற்ற வரலாறு, தொழிற்சங்க நடவடிக்கை, அரசியல் கருத்து மற்றும் சமூகத் தோற்றம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட பாகுபாட்டை *ILO III பாகுபாடு காட்டல்* உள்ளடக்குகிறது.
- குடிமையியல், அரசியல் உரிமைகள் பற்றிய சர்வதேச உடன்பாடு, பிள்ளையின் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாடு மற்றும் இயலாமை உள்ளவர்களின் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்பாடு போன்ற குறிப்பிட்ட சர்வதேச மனித உரிமைகளுக்கான சாசனங்களை மீறுவதாக குற்றஞ்சாட்டப்படுபவர்கள் மீது பொதுநலவாயத்தால் அல்லது அதன் சார்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளை *மனித உரிமைகள்* உள்ளடக்குகின்றன.

நீங்கள் அவுஸ்திரேலியாவில் எந்த இடத்தில் வசித்தாலும், உங்களால் புகார் ஒன்றைச் செய்ய முடியும். மேலும் ஒரு புகாரை அளிப்பதற்கு உங்களுக்கு எந்த செலவும் இருக்காது. புகார் நடைமுறையில் உள்ள வழிமுறைகள் கீழே வரையறுக்கப்பட்டுள்ளன.

## விசாரணை செய்தல்

- நீங்கள் எதையேனும் குறித்து புகார் அளிக்க முடியுமா என்பது குறித்து உங்களுக்கு நிச்சயமின்றி இருந்தால், நீங்கள் ஆணையத்தின் புகார் தகவல் சேவையை **1300 656 419** என்ற எண்ணில் அல்லது complaintsinfo@humanrights.gov.au என்ற மின்னஞ்சல் முகவரி மூலமாக தொடர்பு கொள்ளலாம்.
- செயல்முறையைத் தொடங்குவதற்கு நாங்கள் ஒரு புகார் படிவத்தை உங்களுக்கு அனுப்ப முடியும்.
- எங்களால் உங்களுக்கு உதவ முடியாது எனில், உங்களுக்கு உதவக்கூடிய வேறு ஒருவரிடன் உங்களைப் பரிந்துரைப்பதற்கு முயற்சி செய்வோம்.

## புகார் ஒன்றை அளித்தல்

- புகார் எழுத்து வடிவத்தில் இருக்க வேண்டியது கட்டாயமாகும். நீங்கள் புகார் படிவத்தைப் பூர்த்தி செய்து, அதை எங்களுக்கு அஞ்சல் அல்லது தொலைப்பிரதி வாயிலாக அனுப்பி வைக்கலாம் அல்லது எங்களுடைய இணையத்தளத்தில் இணையம்வழி புகார் ஒன்றைச் செய்யலாம். (www.humanrights.gov.au)
- நீங்கள் விரும்பும் ஒரு மொழியில் உங்களால் புகார் அளிக்க முடியும். தேவையெனில் உங்களுடைய புகாரை நாங்கள் உங்களுக்காக எழுதித் தரவும் முடியும்.
- நீங்கள் புகாரை அளிப்பதற்கு உங்களுக்கு ஒரு வழக்குரைஞர் தேவையில்லை.
- எங்களால் உங்களுடைய புகாரைக் கையாள முடியவில்லை என்றால், அதற்கான காரணத்தை உங்களுக்கு விளக்குவோம்.

## விசாரணை

- உங்களுடைய புகார் குறித்து உங்களுடன் பேசுவதற்கு உங்களை நாங்கள் தொடர்பு கொள்வோம். மேலும் கூடுதல் தகவல்களை வழங்குமாறும் உங்களை நாங்கள் கேட்கக்கூடும்.
- பொதுவாக, உங்களுடைய புகாருக்குத் தொடர்புடைய நபர் அல்லது நிறுவனத்தை ஆணையம் தொடர்பு கொண்டு, உங்களுடைய புகாரின் நகல் ஒன்றை அவர்களுக்கு வழங்கி அவர்களுடைய கருத்துக்களையும் தொடர்புடைய பிற தகவல்களையும் கேட்டுப் பெறும். உங்களுடைய புகார் தொடர்பாக அவர்கள் கூறியதை நாங்கள் உங்களுக்குத் தெரிவிப்போம்.
- சில நிகழ்வுகளில், உங்களுடைய புகாரைக் கையாளத் தொடர வேண்டாமென்று நாங்கள் முடிவெடுக்கக் கூடும். அவ்வாறு நிகழ்ந்தால் அதற்கான காரணத்தை உங்களுக்கு விளக்குவோம்.
- சமரசப் பேச்சுவார்த்தை மூலம் புகாரைத் தீர்த்து வைப்பதற்கு முயற்சி செய்வது குறித்து நாங்கள் உங்களிடம் பேசக் கூடும்.

## சமரசப் பேச்சுவார்த்தை

- நீங்களும், உங்களுடைய புகாருக்குத் தொடர்புடைய நபர் அல்லது நிறுவனமும் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கான ஒரு வழியைக் கண்டறிய உதவுவதற்கு நாங்கள் முயற்சி செய்வோம் என்பதே சமரசப் பேச்சுவார்த்தை என்பதன் பொருளாகும்.
- சமரச கலந்துரையாடல் என்றழைக்கப்படும் ஒரு நேருக்கு நேர் சந்திப்பு அல்லது ஒரு தொலைபேசி கலந்துரையாடல் மூலம் சமரசப் பேச்சுவார்த்தை நடைபெறலாம். சில நிகழ்வுகளில் கடிதங்களைப் பரிமாறிக் கொள்வதன் மூலம் அல்லது சமரசம் செய்பவர் மூலம் தொலைபேசி அல்லது மின்னஞ்சல் வாயிலாக செய்திகள் அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் புகார்கள் தீர்த்து வைக்கப்படலாம்.
- புகார்கள் பல வேறுபட்ட வழிகளில் தீர்த்து வைக்கப்படலாம். உதாரணமாக, மன்னிப்பு கோருதல், கொள்கையில் மாற்றம் அல்லது இழப்பீடு மூலம்.

## நீதிமன்ற நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு வாய்ப்புள்ளவை: பாலியல், உடற் குறைபாடு, இனம் மற்றும் வயது பாகுபாடு காட்டல்

- சட்டவிரோதமான பாகுபாடு காட்டல் நிகழ்ந்துள்ளதா என்பதை முடிவு செய்வதற்கான அதிகாரத்தை ஆணையம் கொண்டிருக்கவில்லை.
- உங்களுடைய புகார் தீர்த்து வைக்கப்படவில்லை அல்லது வேறு சில காரணங்களுக்காக இடைநிறுத்தம் செய்யப்படுகிறது எனில், நீங்கள் அந்த விவகாரத்தை நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்ல முடியும். சட்டவிரோதமான பாகுபாடு காட்டல் நிகழ்ந்துள்ளதா என்பதை நீதிமன்றம் முடிவு செய்யும்.
- அவுஸ்திரேலிய கூட்டாட்சி சுற்று நீதிமன்றம் அல்லது அவுஸ்திரேலிய கூட்டாட்சி நீதிமன்றத்திடம் விண்ணப்பம் செய்வதற்கு, ஆணையம் புகாரை இறுதி செய்த நாளில் இருந்து 60 நாட்கள் உங்களுக்கு கால அவகாசம் இருக்கும்.
- ஆணையம் உங்களுடைய விவகாரத்தை உங்களுக்காக நீதிமன்றத்திடம் கொண்டு செல்லவோ அல்லது உங்கள் வழக்கை நீதிமன்றத்தில் நடத்த உங்களுக்கு உதவவோ முடியாது.
- நீங்கள் நீதிமன்றத்திற்கு செல்ல விரும்பினால், நீங்கள் ஒரு வழக்குரைஞரிடம் அல்லது சட்ட ஆலோசனை சேவையுடன் பேச வேண்டியிருக்கும்.

## முடிவு.·.அறிக்கை - ILO III பாகுபாடு காட்டல் மற்றும் மனித உரிமைகள்

- உங்கள் புகார் தீர்க்கப்படவில்லை என்றால் அல்லது வேறு சில காரணங்களுக்காக இடையில் நிறுத்தப்பட்டால், ILO III பாகுபாடு காட்டல் அல்லது மனித உரிமைகள் மீறல் ஒன்று நிகழ்ந்துள்ளதா என்பதை ஆணையத்தின் தலைவர் முடிவு செய்வார். இருதரப்பினரும் தங்களுடைய நிகழ்வுகளின் பதிப்புகளை சமர்ப்பித்து, கேள்விகளுக்கு பதிலளிக்கும் வேளையில், ஒரு பகிரங்க விசாரணையை ஆணையத்தின் தலைவர் நடத்துவது இதில் உள்ளடங்கலாம்.
- பாகுபாடு காட்டல் அல்லது மனித உரிமைகள் மீறல் ஒன்று நிகழ்ந்துள்ளது என்று ஆணையத்தின் தலைவர் முடிவு செய்தால், அந்த விவகாரத்தை கூட்டாட்சி தலைமை வழக்குரைஞரிடம் தலைவர் அறிக்கை அளிப்பார். அந்த அறிக்கையில், ஒரு நபருக்கு ஏற்பட்டுள்ள ஏதேனும் இழப்பு அல்லது காயத்திற்கான இழப்பீட்டை தலைவர் பரிந்துரைக்கலாம். அந்த அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- பாகுபாடு காட்டல் மற்றும் மனித உரிமைகள் குறித்த தலைவரின் முடிவுகள் அடங்கிய உதாரணங்கள் http://www.humanrights.gov.au/publications/reports-minister-under-ahrc-act என்ற ஆணையத்தின் இணையத்தள முகவரியில் கிடைக்கப் பெறுகின்றன.

## மேலும் அதிகத் தகவல்களை நான் எங்கு கண்டறிய முடியும்?

அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்தின் தொடர்பு விவரங்கள்:

### தொலைபேசி

| | |
|---|---|
| புகார் தகவல் அழைப்பு எண்: | 1300 656 419 (உள்ளூர் அழைப்பு) |
| TTY: | 1800 620 241 |
| NRS | 133 677 |
| தொலைப்பிரதி: | (02) 9284 9611 |

உங்களுக்கு ஒரு உரைபெயர்ப்பாளர் தேவையெனில், நீங்கள் **131 450** என்ற எண்ணை அழைத்து, அவுஸ்திரேலிய மனித உரிமைகள் ஆணையத்திடம் இணைக்குமாறு கேட்கலாம்.

நீங்கள் காதுகேளாதவர் எனில் அல்லது செவித்திறன் குறையுள்ளோர் எனில், நீங்கள் எங்களை 1800 620 241 என்ற எண்ணில் TTY வாயிலாக தொடர்பு கொள்ளலாம். நீங்கள் காதுகேளாதவர் எனில் அல்லது செவித்திறன் அல்லது பேச்சுத்திறன் குறையுள்ளோர் எனில், நீங்கள் எங்களை 133 677 என்ற எண்ணில் தேசிய இடைமாற்றீட்டுச் சேவை (நேஷனல் ரிலே சர்வீஸ் (சேஎ)) வாயிலாகவும் தொடர்பு கொள்ள முடியும். உங்களுக்கு ஒரு ஆஸ்லன் (குறியீட்டு மொழி) உரைபெயர்ப்பாளர் தேவையெனில், அதை ஆணையம் உங்களுக்காக ஏற்பாடு செய்துதர இயலும்.

நீங்கள் பார்வையிழந்தவராகவோ அல்லது பார்வைத்திறன் குறையுள்ளவராகவோ இருந்தால், தகவல்களை வேண்டுகோளின் பேரில் மாற்று வடிவங்களில் ஆணையத்தால் வழங்க முடியும்.

### அஞ்சல்

Australian Human Rights Commission
GPO Box 5218
Sydney NSW 2001

### இணையம்

மின்னஞ்சல்: complaintsinfo@humanrights.gov.au
இணையத்தளம்: www.humanrights.gov.au

நீங்கள் http://www.humanrights.gov.au/complaints/lodging-your-complaint என்ற இணைய முகவரிக்குச் செல்வதன் மூலம், உங்களால் ஒரு புகாரை இணையம்வழியாக அளிக்க முடியும்.

### பொதுவான சட்ட ஆலோசனை

நீங்கள் புகார் ஒன்றை அளிக்க எண்ணம் கொண்டிருந்தால், நீங்கள் சட்ட ஆலோசனையைப் பெறுவதற்கு அல்லது ஒரு சமுதாய அமைப்பைத் தொடர்பு கொள்வதற்கும் கூட கருத்தில் கொள்வதற்கு விரும்பலாம். பாகுபாடு காட்டல் மற்றும் துன்புறுத்தல் குறித்த இலவச ஆலோசனையை வழங்கக் கூடிய சமுதாய சட்ட ஆலோசனைச் சேவைகளும் உள்ளன. உங்களுக்கு அருகாமையில் உள்ள சமுதாய சட்ட ஆலோசனை நிலையத்திற்கான தொடர்பு விவரங்களை நீங்கள் www.naclc.org.au/directory என்ற இணைய முகவரியில் காணலாம்.

**பொறுப்புத் துறப்பு: இந்த உண்மைத் தகவல் தாளில் உள்ள தகவல்கள் ஒரு வழிகாட்டுதலுக்காக மட்டுமே நோக்கம் கொண்டுள்ளன. இது சட்ட ஆலோசனைக்கான ஒரு மாற்றீடு அல்ல.**